(நியூ பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர், ஆசிரியை, மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்களின் படைப்பு)

(தனிச்சுற்று) விற்பனைக்கு அன்று

# நியூ பாரத் சிறகுகள்

# NEW BHARATH SIRAKUGAL

ஆண்டு-1 டிசம்பர்-2024 இதழ்-7 மாதஇதழ் Year - 1 December - 2024 Issue-7



## துணை முதல்வருக்கு மாவட்ட ஆட்சியரின் பாராட்டு!



## பள்ளியின் சார்பாக நலத்திட்ட உதவிகள்



# நியூ பாரத்
## மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

37, புதுத்தெரு, திருவாரூர்

## அட்மிஷன் நடைபெறுகிறது!

**2024-2025க்கான மாணவர் சேர்க்கை**

**முன்பதிவு 03.03.2025 முதல் நடைபெறவிருக்கிறது**

## பள்ளியின் சிறப்புகள்

- அரசு நிர்ணயித்தக் கல்விக் கட்டணம்
- மாணவர்களுக்குத் தனி கவனம்
- மாணவர்களின் திறமைகளைக் கண்டறிந்து அவர்களுக்குப் பயிற்சி அளித்தல்
- ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் கூடிய கல்வி!

தொடர்புக்கு

**நியூ பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி**

37, புதுத்தெரு, திருவாரூர்

newbharathsiragugal@gmail.com

**Cell : 8925055554, 9159922666**

# நியூ பாரத் சிறகுகள்

மாணவர் மாதஇதழ்
(தனிச்சுற்று) விற்பனைக்கு அன்று)

ஆசிரியர் வெளியிடுபவர்
**Dr.N. முரளிதரன்**

கௌரவ ஆசிரியர்கள்
திரு.**கோ.நாகராஜன்**
திருமதி.**நா.பிரகதாம்பாள்**

சிறப்பு ஆசிரியர்கள்
திருமதி. **S. அருணா முரளிதரன்**
திருமதி. **R. கமலா**
திருமதி. **N. விஜயலெட்சுமி**
திருமதி. **S. புவனேஸ்வரி**
திருமதி. **V. கவிதா**
திரு. **A. ராஜதுரை**
திரு. **S. சதீஷ்**

இணை ஆசிரியர்கள்
திரு. **க.சரவணப்பிரியன்**
திரு. **இரா.ரஞ்சித்குமார்**
திரு. **கா.நந்தகுமார்**
திரு. **ந.சந்திஸ்**

வடிவமைப்பு
**யாமீன் கிராஃபிக்**
9080674353

**நியூ பாரத்**
**பதின்ம மேல்நிலைப் பள்ளி**
37, புதுத்தெரு, திருவாரூர்
newbharathsiragugal@gmail.com


அன்பு வாசகர்களுக்கு.

நியூ பாரத் சிறகுகள் மாத இதழானது தொடர்ந்து சிறப்புடனும், புதுமையுடனும் வெளியாவதற்கு துணைநிற்கும் பெற்றோர்கள் துணை முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றி.

நம் இதழானது தடையின்றி தொடர்ந்து வெளியாக தங்கள் படைப்புகளை பிரதி மாதம் 7ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்பும் படைப்புகளை திருத்தம் செய்யவோ, நிராகரிக்கவோ இதழ் ஆசிரியருக்கு உரிமை உண்டு என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசிரியரின் முடிவே இறுதியானது.

இதழாசிரியர்
**Rtn.N. முரளிதரன்**
Email : newbharathsiragugal@gmail.com

## சிறுவனுக்கு இருசக்கர வாகனத்தை ஓட்ட அனுமதி! தந்தை மீது வழக்கு!!



கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி. சுந்தரவதனம் உத்தரவுபடி தக்கலை டி.எஸ்.பி.பார்த்திபன் மேற்பார்வையில் டிராபிக் இன்ஸ்பெக்டர் அருண் மற்றும் போக்குவரத்து காவலர்கள் அழகிய மண்டபம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது 13 வயது சிறுவன் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார்.

இந்நிலையில், 18 வயது பூர்த்தி அடையாத சிறுவனுக்கு வாகனம் ஓட்ட அனுமதித்த தந்தை மீதும், சிறுவன் மீதும் பிரிவு 199ஏ 180 129 ஆகிய மோட்டார் வாகன சட்டப் பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்து நீதிமன்றம் மூலம் ரூபாய் 31,000 அபராதம் விதிக்கப்பட்டது. மேலும், சிறுவர்களுக்கு வாகனம் ஓட்ட அனுமதிக்கும் பெற்றோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் எச்சரித்தனர்.

**- நிறுவனர்**
**நியூ பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

# பொதுத் தேர்விற்கு திட்டமிட சில ஆலோசனைகள்...



நா.பிரகதாம்பாள், தாளாளர்

இந்தக் கல்வியாண்டிற்கான அரசு பொதுத் தேர்வுகள் வரும் மார்ச் மாதம் துவங்குகிறது. இன்னும் இரண்டரை மாதங்களே உள்ளன. டிசம்பர் அரையாண்டுத் தேர்வுக்குள் பாடம் நடத்தி முடிக்கப்பட்டு விடும். ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களும் திருப்புதல் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வுகள் நடைபெறும்.

ஒரு விவசாயிக்கு எப்படி அறுவடைக்காலம் முக்கியமானதோ, அதைப்போல் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தேர்வுக் காலம் மிகவும் இன்றியமையாததாகும். ஓர் ஆண்டு உழைப்பு எதிர்வரும் தேர்வில்தான் வெளிப்படும். நாம் என்னதான் ஆண்டு முழுதும் உழைத்தாலும் இத்தேர்வுக்குத் திட்டமிடல் மிக அவசியம்.

முதற்கட்டமாக மாணவர்கள் உடல் நலத்தில் கவனம் கொள்ளவேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். ஆகவே இப்பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப நம் பழக்க வழக்கங்கள், உணவுமுறை உடை போன்றவற்றை அமைத்துக்கொள்ள வேண்டும். சத்துள்ள உணவுகளையும், கீரை, முட்டை போன்றவற்றை உண்ண வேண்டும். மழைக்காலத்தில் பரவும் தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்கவும், சளி, காய்ச்சல் போன்றவை ஏற்படா வண்ணம் குடிநீரில் கவனம் செலுத்த வேண்டும்.

தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பதால் ஏற்படும் சோர்வு நீங்க எளிய உடற் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

தற்போது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கைபேசிக்கு அடிமையாகிவிட்டனர். அதிலும் மாணவர்களிடம் கைபேசி பயன்பாடு அதிகம். தேர்வு நேரத்திலாவது மாணவர்கள் கைப்பேசியை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மாணவர்கள் கைபேசி விஷயத்தில் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொதுத் தேர்வுக்காக அரசு வெளியிட்டுள்ள கால அட்டவணையை கண்முன் படும்படி, சுவற்றில் ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு மாதத்திற்கான திட்டமிடலை அவர்கள் உருவாக்கிக் கொண்டு ஒருகால அட்டவணையை தயாரித்துக்கொள்ள வேண்டும்.

அதிகாலை நேரத்தில் எழுந்து படிக்கின்ற பழக்கத்தை



தேர்வு களத்தில் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். அதிகாலை 4 மணிமுதல் 7 மணிவரை படிப்பது என்கிற உறுதியை கட்டாயம் கடைப் பிடிக்க வேண்டும். அதுபோல் இரவு 3 மணிநேரம் உங்கள் சூழலுக்கேற்ப படிக்க வேண்டும். அதற்காக நள்ளிரவு வரை கண்விழித்துப் படிப்பதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். மற்ற நாட்களில் 8 மணிநேரம் தூங்கினாலும் தேர்வு காலத்தில் 6 மணிநேரத் தூக்கம் அவசியம். சரியான தூக்கம் இல்லையெனில் உடல் சோர்வு ஏற்பட்டு, படிப்பில் கவனம் சிதறும்.

முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்களை சேகரித்து, அதற்கான விடைகுறிப்புகளை தயார் செய்து படிப்பது, நல்ல மனோ பலத்தைத் தரும்.

நாம் என்னதான் படித் தாலும், தேர்வை எழுதித்தான் எதிர்கொள்ள வேண்டும். திட்ட மிட்டு படித்தால் தேவையற்ற, பயமோ, பதற்றமோ அடையத் தேவையில்லை. திட்டமிட்டு தேர்வுக்கு தயார் செய்வதால் பொதுத் தேர்வை சுலபமாக எதிர்கொள்ளலாம். திட்டமிடுதல் கைக்கொடுக்கும். இப்போதிலிருந்து திட்டமிட்டுத் தேர்வுக்குத் தயாராகுங்கள். மிக எளிதாக தேர்வெழுதி, அனைவரும் வெற்றி பெறலாம். நல்வாழ்த்துகள். ●

# “மை” கூறும் மெய்கள்

ஒரு சமயம் கலைவாணர்
N.S.கிருஷ்ணன்,
எழுத்தாளர்கள் மாநாடு
ஒன்றில் பேசினார்.
“தற்போதைய எழுத்தாளர்கள்
பேனாவை எப்படிப்பட்ட
*மையை* தொட்டு
எழுதுகிறார்கள் தெரியுமா?

சிலர் *தற்பெரு“மை”*யில்
தொட்டு எழுதுகிறார்கள்.
சிலரோ *பொறா“மை”*யில்
தொட்டு எழுதுகிறார்கள்.
வேறு சிலரோ *பழ“மை”*யில்
தொட்டு எழுதுகிறார்கள்.
பரவாயில்லை.
இவற்றையெல்லாம்
*அரு“மை”*யான எழுத்துக்கள்
என்று சொல்லாவிட்டாலும்
ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம்.

**ஆனால் எழுத்தாளர்கள்**
**தொடவே கூடாத சில**
**☼“மை”கள்☼ உள்ளன.**
இவை என்ன தெரியுமா?
*கய“மை”*,
*பொய்“மை”*,


கலைவாணர் **N.S. கிருஷ்ணன்**

*மட“மை”*,
*வேற்று“மை”* ஆகியவைதாம்
எனக் கூறியபோது
கூட்டத்தில் கைதட்டல்
எழுந்தது.

**எழுத்தாளர்கள் தொட்டு**
**எழுதவேண்டிய**
**☼“மைகள்”☼**
என்னென்ன தெரியுமா?
*நன்“மை”* தரக்கூடிய
*நேர்“மை”*,
*புது“மை”*,
*செம்“மை”*,
*உண்“மை”*.
இவற்றின் மூலம் இவர்கள்
நீக்க வேண்டியது எவைத்
தெரியுமா?
*வறு”மை”,
*ஏழ்“மை”*,
*கல்லா”மை*,
அறியா”மை”
ஆகியவையே.

இந்த நோக்கத்தையே
எழுத்தாளர்கள் தங்கள்
*கட“மை”யாகவும்,
*உரி“மை”யாகவும்*
கொண்டு சமூகத்திற்குப்
*பெரு“மை”*
சேர்க்க வேண்டும்“
என்று பேசி முடித்தார்.

கூட்டத்தில் உற்சாக ஒலி
விண்ணைப் பிளந்தன.

**Rtn.N. முரளிதரன்**
**முதல்வர்**

# வியப்பூட்டு கணிதம்



**கணிதத்தில் எந்த ஒரு எண்ணுமே ஒன்றிலிருந்து பத்துக்குள் இருக்கும் எல்லா எண்களாலும் வகுக்கப்பட முடியாது.**

ஆனால் ஒரு எண் மட்டும் உலக அளவில் இருக்கும் கணித வியலாளர்களால் புதிராகப் பார்க்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது என்று கூடச் சொல்லலாம். இந்த எண் பாரதத்தின் அசைக்க முடியாத திறமை வாய்ந்த கணிதவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

*அந்த எண் : 2520*

மேலோட்டமாகப் பார்த்தால் எத்தனையோ எண்களில் இதுவும் ஒன்று என்று தோன்றும்.

ஆனால் அப்படி அல்ல. உலகக் கணிதவியலாளர்களால் கடந்துபோக முடியாத ஆச்சர்யத்தை அவர்களுக்குக் கொடுத்த ஒரு எண் !

ஏனெனில் 1-10க்குள் உள்ள எந்த ஒரு எண்ணாலும் - அது ஒற்றைப்படை எண்ணோ அல்லது இரட்டைப்படை எண்ணோ - வகுக்கப்படக் கூடிய எண்ணாக அது இருந்தது தான்!

இது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடும் : முடியவே முடியாது என்று கூடத் தோனும். கீழேயுள்ள கணித அட்டவணையைப் பாருங்கள்:

*25201 ÷ 2520*

*2520 ÷ 2 = 1260*

*2520 ÷ 3 = 840*

*2520 + 4 = 630*

*2520 ÷ 5 = 504*

*2520 + 6 = 420*

*25207 = 360*

*2520 + 8 = 315*

*2520 + 9 = 280*

*2520 + 10 = 252*

இதன் மர்ம முடிச்சை அவிழ்த்தது:

(7×30×12] -

இந்தப் பெருக்கல்தான்!

நமது பாரதம் பின்பற்றிய ஆண்டுக் கணக்குப்படி இந்தப் புதிருக்கு ஒரு விடை கிடைத்து விட்டது.

இந்த எண்ணை ஒன்றினைத் தவை (coefficient)

வாரத்திற்கு நாட்கள் - 7

மாதத்திற்கு நாட்கள் - 30

ஒரு ஆண்டுக்கு மாதங்கள்-12

*(7 × 30 × 12 = 2520) This is the characteristic and dominance of time.*

(This is the characteristic and dominance of time - இந்த சொற்றொடரை மிகச் சரியாக தமிழில் மொழி பெயர்க்க தெரியவில்லை. அதனால் அதை அப்படியே கொடுத்திருக்கிறேன்.)

இறுதியாக இதைக் கண்டு பிடித்த அந்த அற்புதமான மூளைக்கு உரியவர் - திரு. ஸ்ரீனிவாச இராமானுஜம் அவர்கள். அந்த வணக்கத்துக்குரிய மாமேதையை மாமனிதரை நாம் தலை தாழ்ந்து வணங்குவோம்.

The Great Mind who discovered it was - Sri Srinivasa Ramanujam!

**S. அருணா முரளிதரன்**
**துணை முதல்வர்**



## தமிழ்நாட்டை தாக்கிய புயல்கள்

| | |
|---|---|
| நிஷா புயல் | - 2008 |
| ஜெல் புயல் | - 2010 |
| தானே புயல் | - 2011 |
| நீலம் புயல் | - 2012 |
| மடி புயல் | - 2013 |
| வர்தா புயல் | - 2016 |
| ஒக்கி புயல் | - 2017 |
| கஜா புயல் | - 2018 |
| ஃபனி புயல் | - 2019 |
| நிவர் புயல் | - 2020 |
| மாண்டஸ் | - 2022 |
| மிக்ஜாம் | - 2023 |
| ஃபெஞ்சல் | - 2024 |

**- மோ.கௌசல்யா**




# தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற கடைபிடிக்க வேண்டியவை..!

“தேர்வுக்கு படிப்பது என்பது ஒரு கலை. படித்ததை அழகாக தேர்வில் எழுதுவது ஒருகலை.”

**கையெழுத்து**




விடைகளை திருத்துபவர் வாசிப்பதற்கு முன்பு உங்களை அறிமுகப் படுத்துவது உங்கள் கையெழுத்து.

- கையெழுத்து வாசிக்கிறவருடைய சிரமத்தை குறைக்கிறது.
- சீரான கையெழுத்து, இரண்டு சொற்களுக்கு இடையில் சரியான இடைவெளி, அடித்தல் திருத்தல் இல்லாமை, வாக்கியங்களுக்குச் சரியான இடைவெளி



மேற்கண்டவாறு எழுதினால் திருத்துபவர் மதிப்பீட்டில் நீங்கள் உணர்ந்து நிற்பீர்கள் என்பதை உணர வேண்டும்.

**தலைப்புகள்**

நெடுவினா எழுதும்போது சிறு சிறு துணைத்தலைப்புகள் கொடுத்து Point Point எழுதுவது நல்லது.

**படங்கள்**

- அறிவியல் சம்பந்தமான விடைகளுக்கு படங்கள் வரைய வேண்டியது அவசியமாகிறது.

படங்களை அழகாகவும், தெளிவாகவும் வரைந்து பின் அதற்கான விளக்கங்களை எழுத வேண்டும்.

**தேர்வுக்கு தேவையான பொருட்கள்**

தேர்வுக்கு தேவையான பொருட்களை நாம் முறையாக எடுத்துச்செல்ல வேண்டும். தேர்வு அறையில் மற்றவர் களிடம் இரவல் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

**FIRST IMPRESSION IS THE BEST IMPERSSION.**

வினாத்தாள் வாங்கியவுடன் முழுவதுமாக படியுங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் நன்றாக விடை தெரிந்தாலும் மிகவும் சிறப்பாக எழுதக்கூடிய விடையை எழுதவேண்டும்.

தேர்வு எழுதும்போது நாம் முழுவதுமாகத் தேர்விலேயே கரைந்து போக வேண்டும்.

மூன்று மணி நேரத்தையும் கவனமுடன் சரியாக பயன்படுத்த வேண்டும்.

விடைகளை எழுதி முடித்த பின் ஒருமுறை அவற்றை வாசித்துத் தேவையான திருத்தங்களை மேற்கொள்வது அவசியம்.

(எ.கா) எழுத்து பிழை

- வேதியியலில் Equation
- தாவரவியலில் Botanical name
- கேள்வி எண்ணையும், விடையையும் சரிபார்த்தல் எல்லா கேள்விகளுக்கும் விடையளித்தல். etc.

“கடைபிடியுங்கள், அதிக மதிப்பெண் பெறுங்கள்.”

**R. கமலா**
**துணை முதல்வர்**



# சைபர் குற்றங்கள்

### சைபர் குற்றங்கள் தற்போது உச்சத்தில் உள்ளன. மோசடிக்கு ஆளாகாமல் இருக்க ஆலோசனையைப் பின்பற்றவும்...

*1.* உங்கள் ஃபோனை TRAI எவ்வாறு துண்டிக்கப் போகிறது என்பது பற்றி உங்களுக்கு அழைப்பு வந்தால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*2.* ஒரு பார்சல் பற்றி FedExஆல் அழைக்கப்பட்டு, *1* அல்லது எதையாவது அழுத்தும் படி கேட்டால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*3.* ஒரு போலீஸ் அதிகாரி உங்களை அழைத்து உங்கள் ஆதார் பற்றி பேசினால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*4.* நீங்கள் 'டிஜிட்டல் கைது' செய்யப்பட்டுள்ளீர்கள் என்று அவர்கள் சொன்னால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*5.* உங்களுக்காக அல்லது உங்களால் அனுப்பப்பட்ட பார்சலில் போதை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர்கள் சொன்னால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*6.* இது ரகசியமாக நடத்தப் பட வேண்டும் என்றும் நீங்கள் யாரிடமும் சொல்ல முடியாது என்றும் அவர்கள் உங்களுக்குச் சொல்லலாம். அவர்கள் சொல் வதைக் கேட்காதீர்கள். உடனடியாக சைபர் கிரைம் காவல் துறைக்கு *1930* என்ற எண்ணில் தெரிவிக்கவும்

*7.* அவர்கள் உங்களை WhatsApp அல்லது SMS மூலம் தொடர்பு கொண்டால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*8.* யாராவது உங்களை அழைத்து, அவர்கள் உங்கள் UPI ஐடிக்கு தவறுதலாகப் பணம் அனுப்பியதாகவும், அவர்கள் பணத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் சொன்னால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*9.* யாராவது உங்கள் கார் அல்லது வாஷிங் மெஷின் அல்லது சோபாவை வாங்க விரும்புவதாகச் சொன்னால், அவர்கள் ராணுவம் அல்லது சிஆர்பிஎஃப் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, அவர்களின் அடையாள அட்டையைக் காட்டினால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*10.* யாராவது Swiggy அல்லது Zomatoஇலிருந்து அழைப்பதாகச் சொன்னால், *1* அல்லது வேறு எதையாவது அழுத்தி உங்கள் முகவரியை உறுதிப்படுத்த வேண்டும் என்று சொன்னால், பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி

*11.* ஆர்டரை ரத்து செய்யவோ அல்லது சவாரி செய்யவோ அல்லது வேறு எதற்கோ OTP ஐப் பகிரும்படி அவர்கள் உங்களிடம் கேட்டால், பதிலளிக்க வேண்டாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், உங்கள் OTPஐ தொலைபேசியில் யாருடனும் பகிர வேண்டாம். இது ஒரு மோசடி

*12.* வீடியோ பயன்முறையில் அறியப்படாத அழைப்பு

களுக்கு ஒருபோதும் பதிலளிக்க வேண்டாம். இது ஒரு மோசடி குழப்பம் ஏற்பட்டால், உங்கள் ஃபோனை அணைத்துவிட்டு அந்த எண்ணைத் தடுக்கவும்.

*13.* நீல நிறத்தில் எழுதப் பட்ட எந்த இணைப்பையும் அழுத்த வேண்டாம்.

*14.* உயர் போலீஸ், சிபிஐ, இடி, ஐடி துறையிடம் இருந்து உங்களுக்கு நோட்டீஸ் வந்தாலும்; ஆஃப்லைனில் சரிபார்க்கவும். அத்தகைய கடிதங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க இணையதளங்களில் இருந்து வந்ததா என்பதை எப்போதும் சரிபார்க்கவும்.

விரும்பும் எந்த விவரத்தையும் அறிந்திருக்க வேண்டும் என்று அவர்களிடம் சொல்லுங்கள். அவர்களிடம் உங்கள் விவரங்கள் இருந்தாலும், உறுதிப்படுத்தவோ மறுக்கவோ அல்லது எந்த உரையாடலிலும் சிக்கவோ வேண்டாம். வெறுமனே துண்டிக்கவும் மற்றும் தடுக்கவும்.

இதுபோன்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும், உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான செயல்முறை எளிதானது: அழைப்பைத் துண்டிக்கவும், எண்ணைக் கவனித்துத் தடுக்கவும்.

சைபர் மோசடி செய்பவர்கள் உங்களை சிக்க வைத்து கொள்ளையடிக்க வெவ்வேறு செயல் முறைகளுடன் வெளியே வருகிறார்கள்.

நீங்கள் சிக்கியிருந்தால், பின்பற்றப்பட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி; மோசடி செய்பவர்கள் உங்களைப் பயன்படுத்திக் கொள்வதால், உங்கள் நற்பெயரில் சமரசம் செய்ய எவ்வளவு தொகையாக இருந்தாலும், எந்தத் தயக்கமுமின்றி உள்ளூர் சைபர் போலீஸுக்குப் புகாரளிக்கவும்.

**Rtn. N. Muralidharan**
**Principal**




டிஜிட்டல் சுகாதாரத்தின் விஷயமாக, உங்கள் முகவரி, இருப்பிடம், ஃபோன், ஆதார், PAN, DOB அல்லது எந்தவொரு தனிப்பட்ட விவரங்களையும் தொலைபேசி அல்லது செய்திகள் மூலம் யாருடனும் பகிர வேண்டாம். உண்மையில், அழைப்பில் உங்கள் சொந்த பெயரை ஒப்புக்கொள்ள கூட மறுக்கவும். அவர்கள் உங்களை அழைத்ததிலிருந்து, அவர்கள் உங்கள் பெயர், எண் மற்றும் நீங்கள் 'உறுதிப்படுத்த'

அழைப்பின் போது எந்த எண்களையும் அழுத்த வேண்டாம், அவற்றைக் கேட்க வேண்டாம்.

அழைப்பை துண்டித்து, எண்ணைத் தடு.

நினைவில் கொள்ளுங்கள், அவர்கள் உங்கள் மீது அழுத்தம் கொடுத்தால், உங்களை மிரட்டினால் அல்லது உடனடியாக செயல்பட அல்லது பதிலளிக்கும்படி கட்டாயப்படுத்தினால், அது ஒரு மோசடி.



## How To Train Your Brain

- ➔ Read Everyday.
- ➔ Write down ideas.
- ➔ Exercise on a weekly basis.
- ➔ Get out of the Comfort zone
- ➔ Write down a to-do list.
- ➔ Take time to meditate.

**Child's brain development Activities :-**

* Puzzles
* Building blocks
* Pretend Play.
* Reading
* Abacus classes
* Artistic expression
* Music appreciation
* Story telling
* Visualization exercises
* Creative movement

**M.SOUNDARYA**, M.A., B.Ed.



# Tips for Effective JEE Preparation

Mathematics is often considered the most challenging subject and most students find it daunting to get through the JEE paper. But with the right strategies applied, mathematics can be less intimidating. In this article, we shall discuss how to approach the JEE mathematics paper.

■ **Practise the problems**

Practise until you make it! Yes, this is the only way to ace Mathematics. You will have to put in a lot of time in order to get a hang of the numerical problems. Allot 2-3 hours a day in your timetable just to practise the Mathematics numerical problems. Take up the most difficult and challenging topics first and solve them. Later you can move to the easy one's.

■ **Understand the Logic**

You will have to memorise the formulas but if you can understand the logic behind it and the applications of the formula, then Mathematics can be the most interesting subject amongst all. Read a lot of books and watch simple videos from youtube to understand the logic. This will help you to keep things interesting.

■ **Maintain a Formula Book**

This is one of the important steps that you have to follow while preparing for JEE Mathematics. Maintain a separate notebook where you write down all the formulas that you come across while studying. Keep memorising these formulas in your free time. Write down the formulas on sticky notes or prepare flashcards to remember it well.

■ **Solve Previous Year Question Papers**

Solving previous year question papers is the best way to understand the type of questions that you will come across in JEE. Collect at least 5-8 years of previous question papers and grade yourself after solving them.

- JEE Main Question Papers
- JEE Advanced Previous Year Question Papers

■ **Refer Good Books**

The standard NCERT books have to be followed for JEE Mathematics. Apart from this, there are some other good books which you can follow for your JEE Mathematics preparation. The standard author names are mentioned below:

■ **R.D Sharma, Objective Mathematics**

• S.L Loney, Trigonometry

Arihant Prakashan, Integral Calculus

■ **Attempt Mock Tests**

Mock tests help you to analyse your own strengths and weaknesses. With each mock test, you can track your progress and understand where you are lagging behind. Attempt as many mock tests as possible in order to secure a good score in Mathematics.

By,
**V. Kavitha**
**PG Asst**



தனித்திரு ! விழித்திரு !! வீட்டிலிரு !

# அற்புத கொரோனா !

## (கொரானா காலத்தில் மலர்ந்தவை)

○ அ. பழனிசாமி ஆசிரியர்

அனைவருக்கும் வணக்கம்!

சீனாவின் உகண்டாவில்
உருவான கொரோனா

உலகெல்லாம் ஒலித்துக்கொண்டிருக்கிற
ஒற்றைச் சொல் கொரோனா! கொரோனா!

உலகையே உருட்டிபோட
உறுமாறிய கொரோனா

கொரோனாவினால் -
இவ்வுலகம் மரணத்தை நோக்கி
பயணித்துக்கொண்டிருக்கிற
இவ்வேளையில் கொஞ்சம் சிந்திப்போம்.

முதலில் இந்திய அரசாங்கத்திற்கும் தமிழக அரசுக்கும் அதிகாரிகளுக்கும், தமிழக காவல் துறை நண்பர்களுக்கும். மருத்துவர்களுக்கும், மருத்துவச் செவிலியருக்கும் கொரோனாவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியவர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் நன்றி கலந்த வணக்கம்,

கடவுளை மற மனிதனை நினை என்ற பெரியாரின் மகத்தான முழக்கத்தோடு உங்களிடம் நான்...

* சிந்திப்பவர்களுக்கு சில துளிகள் என்னடா.. இந்த நேரத்தில் இது தேவைதானா என நினைக்காதிங்க,

* I hate Korona and I like korona (கொரோனாவின் வெறிப்பும், நேசிப்பும்.)

I hate Korona பற்றிய நிறைய செய்திகள் இருந்தாலும் I like korona பற்றி ஒரு சில வரிகள்

கொரோனா அணுக்களைவிட சிறியது.
அணுகுண்டுகளை விடப்பெரியது.

- இது மீண்டும் ஒரு ஏழாம் அறிவை எட்டிப் பார்க்க செய்கிறது.

அறிவுக் கண்ணை திறந்த அற்புத கொரோனா,

திமிரோடு கேட்டது?

சூரர், வீரர், கருப்பர், கடம்பர்

முல்லர், மேய்ப்பர்

என அனைத்து நாட்டு கடவுளையும், அனைவரின் கடவுளர்களையும் அழைத்து கடவுளுக்கே சவால் விட்ட சரித்திர கொரோனா

* மனிதனின் வாயை மட்டுமல்ல கடவுளின் வாயிற் கதவையும் அடைத்து வைத்து அற்புதம்



செய்தது! உங்களை வென்றுவிட்டேன் என்றது. அவர்களை ஒன்னும் செய்துவிடாதே என்று கடவுளின் வாயின் கதவை அடைத்து கடவுளையே காத்து வந்தார்கள்

மனித கடவுளர்கள் !

மதம் பிடித்தவர்களுக்கும் மாய மனிதர்களுக்கும் மரண பயத்தை ஊட்டிய மகத்துவ கொரோனா!

சாமிகளுக்கும் சாதிவெறியர்களுக்கும் சவுக்கடி கொடுத்த சவால் நிறைந்த கொரோனா!



மனிதர்களுக்கு துணை நின்ற
சாமிகளும் கொரோனாவிடம்
கேட்கிறது - எங்களை
விட்டுவிடு என்றும் - எங்கள்
வாயிற்கதவுகளை திற உதவு என்றும்

**போலி சாமியார்கள்**

போலி சாமியார்கள் போனி ஆனார்கள். பொலிவான கொரோனாவினால். பேய்களும் பிகாசுகளும் பேச்சு மூச்சு இல்லாமல் போனது. “கொரோனா, கொரோனா என்ற சத்தத்தினால்.

**அற்புத கொரோனா**

ஆண்டியையும் ஆண்ட சாதியினரையும், ஆண்ட பரம்பரையின் ஆணவத்தையும் ஆட்டிப் படைத்த அற்புத கொரோனா

**தீண்டத்தகாதோர்**

தீண்டத்தகாதோர் என ஏளனமாய் பேசிய கூட்டத்தை பார்த்து கேட்டது ஏளனமாய் - எனக்கு தீண்டப்படாதவர்கள் நீங்கள் தான் என்று

உனக்குள் (நீ) தீண்டத்தகாதவர்(ன்)
உன் கையால்
உன் கண்களை தொடக்கூடாது
உன் காதுகளை தொடக்கூடாது
உன் முடியை தொடக்கூடாது
உன் முகத்தை தொடக்கூடாது இப்படி
உனக்கு நீயே தீண்டத்தாதவன்

உன் உறவினர்களுக்கே நீ தீண்டத்தகாதவன் - என சுட்டிக்காட்டிய கொரோனா

**வல்லரசு நாடுகள்**

உலக நாடுகளின் தலைவன் என்று ஆணவத் தோடும் அகந்தையோடும் இருந்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளையே ஆட்டி படைத்த அற்புதக் கொரோனா.

**பண்பலை கொரோனா**

ஊர் கடந்து உலகம் கடந்து
நாடு கடந்து நகரம் கடந்து
சாதிகள் கடந்து சமயம் கடந்து
மதம் கடந்து மனிதம் கடந்து
பரவிக்கொண்டிருக்கிற பண்பலை கொரோனா

என்ன நண்பர்களே!

இப்பொழுதாவது அறிவன்
அம்பேத்கர் சொன்னதை
அறிவு கூர்ந்து பார்க்கவும்
தந்தை பெரியார் சொன்னதை
பகுத்தறிவோடு பார்க்கவும்
யார் தீண்டத்தகாதவர்கள் என்று.

**இயற்கை இன்பமானது**

இயற்கை இன்பமானது, புனிதமானது
இனிமையானது சில நேரங்களில்
சிறியாத ஒன்றை சொல்ல
பெரியதாக ஒன்றை நிகழ்த்தும்
என்ன நண்பர்களே !!
இனியாவது இயற்கையை நேசிப்போம்
தமிழை நேசிப்போம் தமிழர்களை நேசிப்போம்
மனிதர்களை நேசிப்போம்!
மகத்துவம் படைப்போம்.
கொள்கை முழக்கத்தோடு
கொடூர கொரோனாவை ஒழிப்போம்!
அனைவரும் அன்பால் வாழ்வோம்.

**A. பழனிசாமி** ஆங்கில ஆசிரியர்




ஒரு ஊரில் ஒரு ராஜா ஏழை மக்கள் 100 பேருக்கு அன்ன தானம் ஒன்றை ஏற்பாடு செய்தார். அப்போது வானில் ஒரு கழுகு பாம்பு ஒன்றைக் கவ்விக் கொண்டு பறந்தது. கழுகின் பிடியில் சிக்கிய பாம்பு வலி தாங்காமல் விஷத்தை கக்கியது. அந்த விஷத்துளி ராஜா ஏற்பாடு செய்திருந்த உணவில் சிந்தியது. அதை சாப்பிட்ட 100 பேரும் இறந்தனர்.

இதை பார்த்து எமலோகத்தில் சித்திரகுப்தன் எமதர்மரிடம், எமதர்மரே! இந்த நூறுபேர் இறந்த பாவக் கணக்கை யார் ஏட்டில் எழுத வேண்டும். விஷம் கலந்த உணவை அன்ன தானம் இட்ட ராஜா மீதா?, விஷத்தைக் கக்சிய பாம்பின் மீதா?, பாம்பு விஷம் கக்கக் காரணமாக இருந்த கழுகு மீதா? என்று கேட்டார்.

அதற்கு எமதர்மர் எனக்கும் அதே சந்தேகம்தான். கொஞ்சம் கால அவகாசம் எடுத்துக் கொண்டு இருவரும் யோசித்து முடிவு செய்வோம் என்று கூறினர். சிறிது நாள் கழித்து முடிவு எடுக்க எமதர்மரும், சித்திர குப்தரும் கூடினர். ராஜாவின் ஊரை நோட்டமிட்டனர். அப்போது அங்கு ஒரு பாட்டி திண்ணையில் அமர்ந்திருந்தார். அவ்வழியாக சென்ற நால்வர், பாட்டியிடம் இங்கு சாப்பிட உணவு ஏதும் கிடைக்குமா? என்று கேட்டனர். அதற்குப் பாட்டி, இந்த ஊர் ராஜா தினமும் 100 ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவார். அங்கு சென்றால் நீங்கள் சாப்பிடலாம் என்று கூறினர்.

சித்திரகுப்தர், எமதர்மரே!

ஏன் இவ்வளவு கூர்மையாக இந்நிகழ்வை கவனித்தீர்கள் என்று கேட்டார். அதற்கு எமதர்மர் பொறுங்கள் காரணம் உள்ளது என்றார். அந்நால்வரும் அவ்விடத்தை விட்டு நகர்ந்த பிறகு அந்த பாட்டி அருகில் இருப்பவரிடம் இவர்கள் நால்வரும் ராஜாவின் உணவை சாப்பிட்டுவிட்டு உயிரோடவா திரும்பப் போகிறார்கள்? என்று கூறினார். இதைக் கேட்ட எமதர்மர், சித்திரகுப்தரே அந்த நூறுபேர் இறந்த பாவக்கணக்கை இந்தப் பாட்டியின் ஏட்டில் எழுதுங்கள் என்றார்.

நீதி - யாரைப் பற்றியும் புறம் பேசுதல் கூடாது. ஒரு நிகழ்வின் உண்மைத் தன்மை என்னவென்று ஆராயாமல் அதைப் பற்றி புறம்பேசுதல் கூடாது.

**சா.எழிலரசி,** D.T.Ed.,M.A.,
ஆசிரியர்

# வாழ்க்கைத் தத்துவம்

**ர.சிந்துஜா** M.Sc.,B.Ed

- அழிவை தருவது ஆணவம்
- ஆபத்தை தருவது கோபம்
- இருக்க வேண்டியது பணிவு
- இருக்க கூடாதது பொறாமை
- உயர்வுக்கு வழி உழைப்பு
- கண்கண்ட தெய்வம் பெற்றோர்
- செய்ய வேண்டியது உதவி
- செய்யக்கூடாதது துரோகம்
- நம்பக்கூடாதது வதந்தி
- நழுவ விடக்கூடாதது வாய்ப்பு
- நம்முடன் வருவது புண்ணியம்
- பிரியக்கூடாதது நட்பு
- மறக்க கூடாதது நன்றி
- மிகமிக நல்லநாள் இன்று
- மிகப்பெரிய தேவை அன்பு
- மிகக்கொடிய நோய் பேராசை
- மிகவும் சுலபமானது குற்றம் காணல்
- மிகப்பெரிய வெகுமதி மன்னிப்பு



# இளைஞர்களின் எதிர்காலம்
## ஏற்றமிகு தோற்றமே!

இன்று...
அலைபேசியிலே
அத்துனையும்
கிடைத்திட..
அலைந்து ஓய்ந்த
அக்காலமெல்லாம்
கரையேறி கடந்ததென்ன..

அவசர உதவிக்கும்
அதிவிரைவு
சிகிச்சைக்கும்
பல நுட்பம்
இருப்பதென்ன..

பயண நேரம்
குறைந்ததென்ன
பகுதி நேரம்
மிச்சமென்ன..
வேலைநேரம்
வெகுவாக..
சரிந்ததென்ன
உழைப்பின்
பலன்...
சிலநொடியில்
உயர்வதென்ன..

மாற்றம் பல
தொடர்வதென்ன
மாறி மாறி
புதியதென்ன..

ஏராள வசதியும்
வாய்த்ததென்ன
இயந்திரமும்
மனிதன்போல்
நடப்பதென்ன..

நுண்ணறிவில்
வளர்ச்சியென்ன
இனி யாரும்
யாரைப்போல் ஒருசேர...
தெரிவதென்ன..

இப்படி
அசுர வேகத்தில்
அதிசயம் பல இருக்க...
இளைஞர்களின்
எதிர்காலம்
ஏற்றமாகும்
தோற்றமே..!

**கா.நந்தகுமார்**
முதுகலை தமிழாசிரியர்

## எந்த மொழியிலும் இதுபோன்ற சிறப்பு கிடையாது

“தமிழின் உயிர் எழுத்துகளுக்கு காரணம் மனிதனின் உணர்வுகளினால் ஏற்படும் ஒலிகளே”

| உணர்வு | எழுத்து |
|---|---|
| * வலி | * அ. ஆ |
| * சிரிப்பு | * இ. ஈ. |
| * காரம் | * உ. ஊ. |
| * கோபம் | * ஏ. ஏ. |
| * வெட்கம் | * ஐ |
| * ஆச்சர்யம் | * ஒ. ஓ. |
| * வக்கணை | * ஒ |
| * விக்கல் | * ஃ |

இயற்கையாக உருவான மொழி என்றால் அது தமிழாகத்தான் இருக்க முடியும். தமிழனாக பிறந்ததற்கு பெருமை கொள்வோம்.

**R. சுதா D.T.Ed., B.A.,**

## பழமொழியும் உண்மை பொருளும்

**பழமொழி-1** “ஆயிரம் பேரைக் கொன்றால் அரை வைத்தியன்.”

**உண்மை :** “ஆயிரம் வேரைக் கொண்டால் அரை வைத்தியன்”

**பொருள் :** அக்காலத்தில் ஆயிரம் மூலிகை வேர்களை வைத்தியத்திற்காக வைத்திருப்பவனே அரை (பாதி) வைத்தியனாக ஏற்றுக் கொள்ளப் படுவான்.

**பழமொழி : 2** “யானைக்கொரு காலம் வந்தால் பூனைக் கொரு காலம் வரும்”

**உண்மை :** “ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூநெய்க்கு ஒரு காலம் வரும்”

**பொருள்:** ஆ - பசு ஆநெய் பசுவின் நெய்

பூநெய் - பூவிலிருந்து கிடைக்கும் தேன்

இளமைகாலத்தில் உணவில் பசுவின் நெய்யை அதிகம் விரும்பி சேர்த்துக் கொள்வோம். அதுவே நாம் முதுமை அடைந்துவிட்டால், நெய்யைத் தவிர்த்து, மருந்துடன் தேன் கலந்து சாப்பிடும் காலமாக மாறிவிடும்

**க. சரவணப்பிரியன்** தமிழ் ஆசிரியர்

# பாரதிதாசன் (1891-1964)



புதுவையில் பிறந்தவர், புது இலக்கிய நெறி கண்டவர். இயற்பெயர் : சுப்புரத்தினம்.

காரைக்காலைச் சார்ந்த நிரவியல் ஆசிரியர் பணி ஏற்றார். சிறுவயது முதல் சிறுசிறு பாடல்கள் எழுதி வந்தார்.

தமிழ்நாடு, தமிழ் இனம், தாய்மொழி பற்றிய இவர் பாடல்கள் தனித்தன்மை உடையவை.

சாகும்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் என்றும் சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும். என்பது மொழிப்பற்றை குறிக்கிறது.

கவிஞர், இதழாளர், தமிழாசிரியர்', எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன், இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவை படைப்பதில் வல்லவர்.

பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது. இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்

இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்குச் சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது

**இரா. ரஞ்சித்குமார்,** தமிழ் ஆசிரியர்

# நலம் தரப் பழகு

**N. ஸ்ரீதேவி**

- யோகம் பயில் - உடல் நலம் பெறும்
- பசியோடு உண் - வயிறு பதைக்காது
- உழைத்துத் தேடு - செல்வம் ஓட்டும் !
- நேயத்தோடு வாழ் - பகை விலகும்!
- உண்மையாக நட - பயம் போகும் !
- பொதுப்பணம் - விருத்தி நாசம்!
- நெறியான நடைபழகு - நடக்க நடக்கத் தெம்பு !
- அன்பு போற்று - நட்பு தானாக வளரும்!
- பொறுமை - நிதான அமைதி!
- தினம் தியானம் பழகு - நேயம் கைகொடுக்கும்!
- அளவோடு கொஞ்சினால் - பிள்ளையும் பகையாகாது
- நன்மையே செய் - அறம் குடை பிடிக்கும்
- பொய்பேசா மனதில் - மெய்ஞானம் தழைக்கும்
- குணம் பழகினால் - முயற்சி பங்கு தரும்.
- சொல்வதைச் செய் - செயல் பேசும்
- மூச்சுப் பயிற்சி உயிருக்குத் தேர்ச்சி!

# சித்தன்ன வாசல் குகை ஓவியங்கள்!



**தமிழ்நாடு,** புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்ன வாசல் என்ற கிராமத்தில் அமைந்துள்ள குடை வரை குகை ஓவியங்கள் மிகப் புகழ் பெற்றவை இவை அறிவர் கோயில் என்றும் அழைக்கப் படுகிறது. இந்த கோவிலின் மேல் புறத்தில் மகேந்திர வர்மன் காலத்து ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இவை அஜந்தா குகை ஓவியங்களைப் போன்று தனிச்சிறப்பு மிக்கவை.

சமணர்களால் மூலிகையால் தயாரிக்கப்பட்ட வர்ணங்களைக் கொண்டு வரையப்பட்டவை. சுமார் 70மீ உயரமே உள்ள இக்குன்றுகளின் மேல் சமணர் களின் படுக்கையும், தவம் செய்யும் இடமும் பல இடங்களில் குடைவறைகளும், காணப்படுகின்றன. 1990களில் நிறம் மங்கத் துவங்கியதால், செயற்கையாக நாம் தற்போது பயன்படுத்தும் வர்ணம் போன்ற பொருளைக் கொண்டு புதுப்பிக்கப்பட்டது.

**U.L.Sumathi,** Teacher

# வாழ்க்கையில் நற்பண்புகள் என்பது ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியம்?

- N. Vijayalakshmi
துணை முதல்வர்



- நற்பண்புகளைக் கொண்டோரைத்தான் இச்சமூகம் சான்றோன் என போற்றுகிறது.
- பிறரிடம் அன்பாக இருப்பது,
- பிறருக்கு உதவுவது,
- பிறர்மீது அக்கறை காட்டுவது
- பிறர் செய்த தவறுகளை மறந்து மன்னிப்பது. இதெல்லாம்தான் நற்பண்புகள்,
- பெரியோரை மதிப்பது,
- தவறு இழைத்தால் அதற்காக வருந்துவது,
- உதவி செய்தவர்கள் மீது நன்றியுடன் இருப்பது

இதெல்லாம்தான் இன்று குறைந்து வரும் நற்பண்புகள்.

முடிந்தவரை இப்பண்புகளை குழந்தைகளுக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் சொல்லி வளர்க்க வேண்டும்.

இப்பண்புகளற்ற குழந்தைகள் பிற்காலத்தில் போக்கிரியாகவும், வன்முறை செயல்களைச் செய்யும் மனிதர்களாகவும் மாறிப் போய் விடுகிறார்கள். அரசியலில் புகுந்து ஒட்டுமொத்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிறார்கள்.

ஒரு பண்பற்ற மனிதனால் பலரது வாழ்வு காணாமல் போய்விடுகின்றன.

ஆக, நற்பண்புகள் தனக்கு மட்டுமின்றி இச்சமூகத்திற்கு மிக முக்கிய தேவையாக இருக்கின்றது.

**மனிதனிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் :**

1. வைராக்கியம் (Assertiveness)
2. தேசநலன் (Citizenship)
3. வீரம் (Chivalry)
4. துணிச்சல் (Courage)
5. கீழ்படிதல் (Obedience)
6. வெளிப்படையாக (Openness)
7. ஒழுங்குமுறை (order)
8. ஏற்றுக் கொள்ளுதல் (Acceptance)
9. ஆன்மிகம் (Spirituality)
10. கருணை (Mercy)
11. இரக்கம் (Compassion)
12. காரணம் அறிதல் (Consideration)
13. அக்கறையுடன் (Mindfulness)
14. பெருந்தன்மை (Endurance)
15. பண்புடைமை (Piety)

## தெரிந்துகொள்வோம்!

- ஒலிம்பிக் கொடியில் இடம் பெற்றுள்ள வளையங்கள் எத்தனை? – **ஐந்து**
- 2004 ஒலிம்பிக் போட்டி எங்கு நடை பெற்றது? – **பிரான்சு**
- ICC 50 ஓவர் உலகக் கோப்பை இந்தியா எத்தனை முறை வென்றுள்ளது ? – **ஐந்து**
- ஒலிம்பிக் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி -யார்? – கர்ணம் மல்லேஸ்வரி
- முதல் ஒலிம்பிக் போட்டி எங்கு எப்பொழுது நடைபெற்றது ? – **ஏதென்ஸ் 1896**

**R. Sushmitha.**
**B.P.E.S, B.P.Ed, Diploma in yoga.**



# உலக பொது அறிவு

1. காலக்குலேட்டரை கண்டுபிடித்தவர் - **பாஸ்கள்**
2. இந்தியாவில் மட்டும் காணப்படும் விலங்கு - **நீல்கிரி தாவறிர் மான்**
3. எந்த நாட்டில் அதிகம் தேனீர் அருந்துகிறார்கள் - **இந்தியா**
4. தொட்டவுடன் பறக்கும் பறவை - **டைட்டோனி பறவை**
5. உலகின் மிகப்பெரிய உப்பு ஏரி எந்த நாட்டில் உள்ளது. - **ரஷ்யா**
6. எறும்புக்கு எத்தனை கால்கள் உள்ளன? - **ஆறு கால்கள்**
7, அசிரி நாடு என்று அழைக்கப்படுவது எது? - **தாய்லாந்து**
8. மிக அதிக நீளமான கடற்கரையை கொண்ட தென் மாநிலம் எது? - **ஆந்திரப்பிரதேசம்**
9. இந்திய அறிவயற் கழகம் அமைந்துள்ள நகரம் எது? - **பெங்களூர்**
10. இந்தியாவின் மிகப்பெரிய நதி எது? - **கங்கை**

**R. Archana, Teacher**

1. இந்தியாவின் முதல் பெண் பிரதமர் யார் ? - **இந்திரா காந்தி**
2. வெள்ளைப் புரட்சியின் தந்தை யார்? - **வர்கீஸ் குரியன்**
3. சுதந்திர இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் எப்போது நடைபெற்றது? - 1951.
4. ஐ.நா சபையின் முதல் பெண் தலைவர் யார்? - **விஜயலஷ்மி பண்டிட்**
5. X கதிர்களை பயன்படுத்தி எந்த நோயை குணப்படுத்த முடியும்? - **புற்றுநோய்.**
6. எந்த விலங்கின பால் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும்? - **நீர்யானை.**
7. பூமியில் கிடைக்கும் கடினமான பொருள் எது ? - **வைரம்**
8. உலகில் பொதுவான தொற்றாத நோய் எது ? - **பல்சிதைவு**
9. காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது? - **சீனா**
10. உலக வரலாற்றில் பழமையான மரமாக கருதப்படுவது? - **பேரீச்சை மரம்.**

**K. Ramya, B.Sc Maths**

1. பத்திரிகை வெளிவராத நாடு எது? - **திபெத்**
2. ஒரு போதும் மலராத பூ எது ? - **அத்திப்பூ**
2. உலகிலேயே மிக நீளமான நதி எது? - **நைல் நதி (669.கி.மீ)**
4. வேர் இல்லாத தாவரம் எது? - **இலுப்பை**
5. உலகிலேயே மிகப்பெரிய வளைகுடா எது? - **மெக்சிகோ வளைகுடா**
6. ஆட்சி மாற்றம் இல்லாத நாடு ? - **மெக்சிகோ**
7. உலகில் வறுமையான நாடு எது? - **ருவாண்டா**
8. எது பாலைவனம் இல்லாத கண்டம்? - **ஐரோப்பா**
9. உலகிலேயே மிக அகலமான நீர்வீழ்ச்சி எது ? - **நயாகரா நீர்வீழ்ச்சி**
10. வரலாற்றில் அதிக காலம் (அரசரல்லாத) ஜனாதிபதியாக இருந்தவர் உடைய நாடு? - **கியூபா**

**N. LATHA, B.Sc.,B.Ed., (Teacher)**



# நேரம்

நகரின் மையத்தில்
கம்பீரமாக நிற்கும்
அந்த மணிக்கூண்டின்
நான்கு கடிகாரங்களும்
நான்கு விதமான நேரம்
காட்டி
ஓடாமல் நின்றன...
மணிக்கூண்டின் அருகில்
என்று முகவரியை
அறிமுகப்படுத்திய கடைகளோ
கடிகாரங்களை வழங்கியோர்
என்ற பெயர் விளம்பரம்
தேடிய
நிறுவனங்களோ
மணிக் கூண்டின் அருகில்
இருக்கும்
தலைவர் சிலைக்கு அடிக்கடி
மாலையிடும் கட்சிகளோ
எதுவுமே சரிசெய்ய
முன் வரவில்லை...
பள்ளி அருகே
நடைபாதையோரம்
துண்டு விரித்து
நாவல் பழக்கடைபோடும்
நாகம்மா,
பள்ளிவிடும் நேரம் பார்க்க
மணிக்கூண்டை
நோக்கும் போதெல்லாம்
சலித்துக் கொள்கிறாள்..
'தன்னைப் போலவே
மணிக்கூண்டுக்கும் நேரம்
சரியில்லை. என்று...!

**S. நித்திஷ் சண்முகசுந்தரம்**
F/o. N.S. சஹானா IX-A

## காலை உணவை தவிர்ப்பதால் ஏற்படும் விளைவுகள்



1. இரத்த அழுத்தம்
2. நீரழிவு
3. குடற்புண்
4. உடல் பருமன்
5. ஹார்மோன் மாற்றம்
6. மூளை செயல் திறன் பாதிப்பு
7. வாய் துர்நாற்றம்

எனவே காலை உணவை தவறாமல் உட்கொள்வோம், நோயின்றி வாழ்வோம்.

**ப. குமாரவேலு** ஆசிரியர்

## இராணுவ அதிகாரிகளின் பதவி வரிசை



1. லெப்ட்டினன்ட்
2. கேப்டன்
3. மேஜர்
4. லெப். கர்னல்
5 கர்னல்
6. பிரிகேடியர்
7. மேஜர் ஜெனரல்
8. லெப்.ஜெனரல்
9. ஜெனரல்.

ஃபீல்டு மார்ஷல் என்பது ஜெனரல் பதவியை சிறப்பாக வகித்தவருக்கு அளிக்கும் கௌரவ பதவி.

**- K.கௌசல்யா**
ஆசிரியர்



# கடி ஜோக்ஸ்

தண்ணியே இல்லாத கடல் எங்க இருக்குன்னு சொல்லுங்க பார்ப்போம்? - விடை : Map

ஒருத்தன் டீ வாங்க துப்பாக்கி எடுத்துட்டு போனான் ஏன் தெரியுமா ? - விடை: **ஏன்னா அவன் சுட சுட டீ வாங்க போனானாம்**

ஒருத்தன் ஆடு கோழி எல்லாம் வளர்த்தான், ஒரு நாள் அதுக்கு சோறு வைக்கும்போது ஓடிப் போயிடுச்சாம் ஏன்?

விடை : **ஏன்னா அவன் வச்சது புளி (புலி) சோறு**

ஒரு பொண்ணு எப்பவுமே ரூம் கதவை குளோஸ் பண்ணிட்டுதான் டானிக் குடிப்பாளாம் ஏன்?

விடை : **ஏன்னா டாக்டர் தான் அரை(றை) மூடி குடிக்க சொன்னாராம்.**

**- தேவகண்யா இ.ரா. 9-A**

1. யாராலயும் உடுத்த முடியாத பட்டு எது ?
   விடை : **செங்கல்பட்டு.**
2. ஆறையும் ஆறையும் சேர்த்தா என்ன வரும்?
   விடை: **வெள்ளம்தான் வரும்.**
3. ஒருத்தன் Exam - Hallக்கு போய்ட்டு திரும்பி வந்துட்டானா ஏன்?
   விடை: **ஏன்னா அது** Return Exam
4. உலகத்திலேயே எந்த நரி பெரிய நரி?
   விடை: DICTIONARY
5. பேச முடியாத வாய் எது?
   விடை : **செவ்வாய்.**
6. ஒருத்தனோட தலையில் இருந்து "இலை"யா கொட்டுச்சாம் ஏன்?
   விடை: **ஏன்னா அவ மரமண்டையாம்.**
7. வருடத்திற்கு ஒரு முறை வரும் Guest யாரு???
   விடை: ஆகெஸ்ட் (August)
8. ஓட்ட முடியாது Cycle எது?
   விடை : Life cycle.

**By : M. Gara faazlina 9-A'**



## குளிர்காலத்தில் கட்டாயம் சாப்பிட வேண்டிய உணவுகள்

ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்களில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது.

கீரை, முட்டைகோஸ் போன்றவற்றில் ஆண்டி ஆக்சிடென்ட்கள் நிறைந்துள்ளதால் குளிர் காலத்தில் ஏற்படும் மந்தமான உணர்வை குறைக்கும்.

வேர்க்கடலையை வறுத்து சாப்பிட்டால் உடலில் உள்ள வெப்பம் சரியான அளவாக இருக்கும்.

குளிர்காலத்தில் கொய்யாப்பழம் சாப்பிடுவதால் இதய ஆரோக்கியம் மேம்படும்.

ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பாதாம் வால்நட்ஸ் போன்றவற்றை குளிர்காலத்தில் சாப்பிடலாம்.

**- B. Selvarani ஆசிரியர்**

## முயற்சி !

**K. நித்யா**
**ஆசிரியர்**



முற்றுப் புள்ளியைக் கூட
மூன்று முறை வைத்தால்
தொடர்ச்சி ஆகிவிடும்
முயற்சித்துக் கொண்டே
இருங்கள், உங்கள் வாழ்க்கை
வளர்ச்சி ஆகிவிடும்.
நன்றி...

# சிறுநீர் கழிப்பது பற்றி நாம் பெரிதாக அறியாத 15 உண்மைகள்

**மருத்துவம், வாழ்க்கை முறை**

நம் உடலில் தேவையானவற்றை ஊட்டச் சத்தாக, கொழுப்பாக பிரித்து எடுத்த பிறகு, வேண்டாதவற்றை உடல் மலமாகவும், சிறுநீராகவும் வெளியேற்றுகிறது.

மலம், மற்றும் சிறுநீர் உடலுக்கு வேண்டாதவை என்ற போதிலும், ஒருவரது உடல் நலம் எப்படி இருக்கிறது?

அவரது ஆரோக்கியம் சீர்குலைந்து வருகிறதா?

ஒருவரது உடலில் என்ன நோய் தொற்று அல்லது நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை மலம் மற்றும் சிறுநீரில் ஏற்படும் மாற்றங்களை வைத்து கண்டறிய முடியும்!

நீங்கள் சிறுநீரை அடக்குபவரா? அப்ப கட்டாயம் இத படிங்க...

இனி, சிறுநீர் கழிப்பதில் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய சில உண்மைகளைப் பற்றி பார்க்கலாம்...



**உண்மை 1 -** ஒருநாளுக்கு ஒருவர் 7 முறை வரை சிறுநீர் கழிப்பது சாதாரணமாகும். இதை காட்டிலும், மிக குறைவாக அல்லது அதிகமாக சிறுநீர் கழிப்பது உங்கள் ஆரோக்கியத்தில் ஏதோ மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதன் அறிகுறி.

**உண்மை 2 -** நீங்கள் ஆரோக்கியமாக இருக்கிறீர்கள் என்றால் குறைந்தபட்சம் 7 நொடிகளாவது சிறுநீர் கழிப்பீர்கள். மிக அவசரமாக சிறுநீர் கழிப்பது போன்ற உணர்வு இருந்தும் 2 நொடிகள் மட்டும் சிறுநீர் கழிக்கிறீர்கள் என்றால் நீங்கள் ஏதோ தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என அர்த்தம்.

**உண்மை 3 -** முதிர்ச்சி அடைந்த ஓர் நபரின் சிறுநீர்ப்பை 300 - 500 மி.லி அளவிலான சிறுநீரை அடக்கி வைத்துக் கொள்ள இயலும்

**உண்மை 4 -** ரோமர்கள் அவர்களது சிறுநீரை கொப்பளிக்கும் பழக்கம் கொண்டிருந்தனர். சிறுநீரில் இருக்கும் அமோனியா பற்களை வெள்ளையாக வைத்துக் கொள்ள உதவும் என அவர்கள் எண்ணினார்கள்.

**உண்மை 5 -** உங்கள் சிறுநீரின் நிறத்தை வைத்தே உங்கள் உடல்நிலையை பற்றி அறிந்துக் கொள்ள முடியும்.,

வெள்ளை (சுத்தமாக) - நீர்ச்சத்து அதிகமாக இருக்கிறது. வெளிறிய மஞ்சள் - போதுமான அளவு நீர்ச்சத்து மஞ்சள் - உடலில் நீர்ச்சத்து குறைந்து வருகிறது.

பிரவுன் - கல்லீரல் தொற்று / பழைய இரத்தம்.

சிவப்பு/பின்க்-தூய இரத்தம் சிறுநீரில் கலந்து வருகிறது / சிறுநீரக கோளாறு/புற்றுநோய்.
நீலம், பச்சை - தவறான மருந்துகள் உட்கொள்ளுதல் / உணவில் அதிகப்படியான சாயம் கலப்பு

**உண்மை 6 -** சிறுநீர்கழிக்கும் போது இனிப்பு வாசனை வருகிறது எனில், உங்களுக்கு நீரிழிவு/சர்க்கரை நோய் ஏற்பட்டுள்ளது என்பதன் அறிகுறி.

**உண்மை 7 -** சிறுநீர் மிகவும் துர்நாற்றம் வீசுகிறது எனில், சிறுநீரகத்தின் வழியாக குளூகோஸ் மற்றும் புரதம் அதிகப்படியாக வெளியேறுகிறது என்று அர்த்தம்.

**உண்மை 8 -** மருத்துவர்கள் ஒளிகுர்யா (oliguria) எனும் ஓர் நிலை இருக்கிறது என்று கூறுகிறார். இது, நீங்கள் போதுமான அளவு சிறுநீர் கழிப்பது இல்லை என்பதை வெளிக்காட்டுகிறது என்கின்றனர்.

**உண்மை 9 -** நாம் கழிக்கும் சிறுநீரில் சோடியம், பொட்டாசியம் மற்றும் குளோரைட் போன்ற 3000 வகையிலான கூறுகள் இருக்கின்றன.

**உண்மை 10 -** காரமான உணவுகள், காபி போன்ற உணவுகளை அதிகமாக உட்கொள்வதால் உங்கள் சிறுநீரின் நாற்றத்தில் மாற்றம் உண்டாக்கும்.

**உண்மை 11**

காட்டில் அல்லது ஆட்கள் இல்லாத இடத்தில் தொலைந்து போனாலோ, கையில் நீர் இல்லாத சமயத்தில் சிறுநீரை அருந்தலாம் என சிலர் கூறுவதுண்டு. ஆனால், இது தவறு. சிறுநீரில் இருக்கும் அதிகப்படியான உப்பு, உடலில் நீர் வறட்சி உண்டாக காரணியாக அமையும்.

**உண்மை 12 -** Parauresis எனப்படுவது சிறுநீர் கழிக்க வெட்கப்படும் நிலை ஆகும். அருகில் யாரேனும் இருந்தால் சிலர் சிறுநீர் கழிக்க சங்கோஜப்படுவார்கள்.

**உண்மை 13 -** நீச்சல் குளத்தில் குளிக்கும் போது கண்கள் சிவப்பது குளோரின் காரணத்தால் அல்ல. நீச்சல் குளத்தில் அதிகமாக சிறுநீர் கலப்பு ஏற்பட்டிருப்பதால்.

**உண்மை 14 -** குழந்தைகள் கருப்பையில் இருக்கும் போதே சிறுநீர் கழிக்க துவங்கி விடுவார்கள்.

